பதிவுஞ்சலில் ஒப்புகையுடன்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.எல்.பிரித்தா பி.எஸ்ஸி

ந.க.எண்:25830/எம்5/2017 நாள்:18.12.2023

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி.அ.பிரபா, இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– தொடர்பாக.

பார்வை : அரசாணை (டி) எண்.691, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை, நாள்.24.11.2023.

******

ஆணை:

கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு இராதாபுரம் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.அ.பிரபா, இளநிலை உதவியாளரது பணியினை அப்பதவியில் 08.01.2021 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி பார்வையில் காணும் அரசாணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை அசல் இணைக்கப்பட்டுள்ளது)

தன்னியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 08.01.2021 முற்பகல் முதல் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவகாலத்தில் மீன்துறை நடைமுறை நூல் பாகம்–1–ல் தேர்ச்சி பெறவேண்டும் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்திருக்கவேண்டும்.

மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தேர்வில் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறாமல் இருந்தால் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்படமாட்டாது. மேலும் பணியிலிருந்து நீக்கப்படுவார் (Termination of Service) என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் அரசாணை (அசல்)

எல்.பிரித்தா
19.12.23
துணை இயக்குநர் (பணியாளர்)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பெறுநர்

திருமதி.அ.பிரபா,
இளநிலை உதவியாளர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், இராதாபுரம் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) –வழியாக.

19/12/2023

26 DEC 2023

Scanned with CamScanner

நகல்

1) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) தூத்துக்குடி
2) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) கன்னியாகுமரி
3) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், இராதாபுரம் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி).
4) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில் (இருப்பு) குளச்சல்
   - தனியரின் பணிப்பதிவேடு (1 பவுண்ட்) மற்றும் பதிவுத்தாட்கள் 1 பக்கம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனைப் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகையளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
5) 'எஸ் 2' உதவியாளர், தலைமை அலுவலகம்.
6) 'எம் 5' இருப்புகோப்பு

மே.கு.எண்: 1693/அ/2023-1

உதவி இயக்குநர் அலுவலகம்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
(விரிவாக்கம் மற்றும் பயிற்சி)
இராதாபுரம்

நாள்: 29.12.2023

தகவலுக்காக அசலாக அனுப்பலாகிறது

உதவி இயக்குநர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
(விரிவாக்கம் மற்றும் பயிற்சி)
இராதாபுரம்

29/12/23

பெறுநர்
திருமதி. அ. பிரபா
இளநிலை உதவியாளர்

Scanned with CamScanner

சுருக்கம்

மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. அ. பிரபா, பணியினை வரன்முறை செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலன் (மீன்–2) துறை

அரசாணை (டி) எண்.691 நாள் : 24.11.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

ஸ்ரீ சோபகிருது, கார்த்திகை–8

படிக்கப்பட்டது :–

1) அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ1) துறை, நாள் 08.03.2023.
2) அரசு கடித எண்.5532/ஜி2/2023–1, மனிதவள மேலாண்மை துறை, நாள் 20.09.2023.
3) ஆணையர், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை அவர்களின் கடித ந.க.எண்.25830/எம்.5/2017, நாள் 08.05.2023 மற்றும் 02.11.2023.

-----

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆணையர், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை அவர்கள் தூத்துக்குடி (மண்டலம்) மீன்வளத்துறை இணை இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வக பையனாக பணிபுரிந்து 07.10.2017 அன்று பணியிடை காலமான பா.அண்ணாதுரையின் மனைவியும் வாரிசுதாரருமான திருமதி அ. சாந்தி அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக தெரிவித்து அவரது மகளான திருமதி. அ. பிரபாவிற்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டுள்ளது என்றும், திருமதி. அ. பிரபா பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததையடுத்து, நடைமுறையில் உள்ள விதிகளின்படி போதிய வயது வரம்பை பூர்த்தியடைந்ததையடுத்தும் காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்றும் வேறு எவரும் அரசு துறை மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியவில்லை என்றும் மனுதாரர் குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என ஏரல் வட்டம் வருவாய் வட்டாட்சியர் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும், திருமதி. அ. பிரபாவுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக மீன்வளத்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், கருணை அடிப்படையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட திருமதி. அ. பிரபாவின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1–இல் உள்ள மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, மீன்வளம் (ம) மீனவர் நலத்துறையில் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் மீன்வளத்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக

Scanned with CamScanner

தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. அ. பிரபா அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.17412/க்யூ.1/2022, நாள் 25.11.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.5349/ஜி2/2022, நாள் 14.11.2023-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை, சென்னை-35.
திருமதி. அ. பிரபா, இளநிலை உதவியாளர்,
(ஆணையர், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை மூலமாக).

நகல்

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiru... 27/11/2023
பிரிவு அலுவலர்

Scanned with CamScanner